**தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக் கூற்றுக்கள் கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) இந்த அறிக்கையின் 1.6.1 (இ) பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினை தவிர, நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமானமல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கட்டு நிதி பெறுவனவு ரூபா 91,558,475 ஆன போதிலும் அது நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 91,370,000 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 188,475 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற கட்டு நிதி ரூபா 91,370,000 ஆக இருந்தது. எம்மால் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திடமிருந்து கிடைத்த கட்டுநிதி தொடர்பான விபரங்கள் அடங்கிய பதிவேடொன்று தாங்களுக்கு கணக்காய்விற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் தொடர்ந்தும் உறுதிப்படுத்துவதற்காக அந்த பதிவேட்டின் பிரதியொன்றினை பின்னிணைப்பு ஒன்றாக கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ளது. | கட்டுநிதி பெறுவனவுகள் நிதிக் கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

## 1.6.2 நிதியல்லாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் ஆரம்ப மீதி நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான சுற்றின் பிரகாரம் ரூபா 23,715,603 ஆகவும் திறைசேரியின் கணனி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் அது ரூபா 26,565,129 ஆனமையால் ரூபா 2,849,526 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சொத்துக்களின் வகைகளின் பிரகாரம் பெறுமதிகள் வேறுபட்ட போதிலும் ஒட்டுமொத்த சொத்துக்களின் பெறுமதி ஏசீஏ 6 இல் மற்றும் ஏசீஏ 82 இல் சமனாகும். | நிதியல்லாத சொத்துக்கள் குறிப்பில் சொத்துக்களை பதிவு செய்யும் போது ஆரம்ப மீதி, கொள்வனவுகள், கைதவிர்ப்புக்கள் மற்றும் இறுதி மீதி ஆகியவற்றை சரியாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மேற்படி உபகரணங்களை சுவீகரிக்கும் மீதி (மாற்றல்கள் மூலம்) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் ரூபா 2,763,525 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் திறைசேரியின் கணனி அச்சீட்டின் பிரகாரம் மீதியொன்று காண்பிக்கப்படவில்லை. | - மேற்படி - | நிதியல்லாத சொத்துக்கள் குறிப்பில் சொத்துக்களை பதிவு செய்யும் போது ஆரம்ப மீதி, கொள்வனவுகள், கைதவிர்ப்புக்கள் மற்றும் இறுதி மீதி ஆகியவற்றை சரியாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) மேற்படி உபகரணங்களை கைத்தவிரக்கும் போதான மீதி (மாற்றலகள் மூலம் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 1,353,346 ஆகவும் திறைசேரியின் கணனி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் ரூபா 1,439,347 ஆகவும் காணப்பட்டமையால் ரூபா 86,001 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நிதியல்லாத சொத்துக்கள் குறிப்பில் சொத்துக்களை பதிவு செய்யும் போது ஆரம்ப மீதி, கொள்வனவுகள், கைதவிர்ப்புக்கள் மற்றும் இறுதி மீதி ஆகியவற்றை சரியாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்கள் கூற்று மற்றும் திறைசேரியின் கணனி அச்சீடுகளை பரீட்சிக்கும் போது அலுவலக உபகரணங்களின் மீதி ரூபா 2,635,432 இனாலும் கணனி உபகரணங்களின் மீதி ரூபா 789,828 இனாலும் இலத்திரனியல் உபகரணங்களின் மீதியானது ரூபா 335,500 இனாலும் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் மீதியானது ரூபா 1,510,103 இனாலும் வேறுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நிதியல்லாத சொத்துக்கள் குறிப்பில் சொத்துக்களை பதிவு செய்யும் போது ஆரம்ப மீதி, கொள்வனவுகள், கைதவிர்ப்புக்கள் மற்றும் இறுதி மீதி ஆகியவற்றை சரியாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | ரூபா 4,995,000 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் இரண்டு மற்றுமொரு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதனை நிதிக்கூற்றுக்களில் அகற்றாத காரணத்தினால் நிதி நிலைமைக் கூற்று அந்தப் பெறுமதியினால் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதியல்லாத சொத்துக்களை சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | டபள் கெப் வாகனத்தின் பெறுமதியான ரூபா 7,530,000 தொகையான நிலையான சொத்துப் பதிவேட்டின் ரூபா 4,800,000 ஆக பதிவு செய்த காரணத்தால் ரூபா 2,730,000 நிதி நிலைமைக் கூற்றில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நடப்பாண்டினுள் திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி ரூபா 91,558,475 ஆன போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதியாக ரூபா 91,370,000 காண்பிக்கப்பட்ட காரணத்தால் தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 188,475 இனால் வேறுபட்டமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றேன். | காசுப் பாய்ச்சலை சரியாக இனங்கண்டு கணக்கு வைக்க வேண்டியமை. |
| (ஆ) திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்ய வேண்டிய மீதியொன்று காண்பிக்கப்படாத போது காசுப்பாய்ச்சல் கூற்றில் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 76,673 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | - மேற்படி - |

### 1.6.4 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்கு சீராக்கப்பட வேண்டிய முற்பணக் கணக்கின் மீதி ரூபா 1,217,925 ஆன போதிலும் அது ரூபா 1,029,450 ஆக சீராக்கப்பட்டமையால் ரூபா 188,475 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ஆதனக் கடன் தொகையினை தீர்ப்பனவு செய்வதற்காக ரூபா 188,475 ஆன பணம் கிடைத்திருந்தது. அவ்வாறான பெறுவனவுகளை கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்கு சீராக்கம் செய்யாததுடன் ஒவ்வொரு திணைக்களத்திற்கிடையே குறுக்கு பதிவுகளின் மூலம் கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்தல் மாத்திரம் கட்டுநிதி | திறைசேரியின் அச்சீட்டு பதிவுகள் மற்றும் திணைக்களத்தின் புத்தகங்களை ஒப்பிட்டு கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | சீராக்கல் கணக்கினுள் உள்ளடக்கப்படும். அதன் பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்கு சரியாக தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்ய வேண்டிய மீதியொன்று குறிப்பிடப்பட்டிராத போதிலும் தீர்ப்பனவு செய்ய வேண்டிய கட்டுநிதி கணக்கில் ரூபா 76,673 ஆன மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020.12.31 ஆந் திகதி திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட தொகை அத்திகதியிலேயே தீர்ப்பனவு செய்யப்பட்ட காரணத்தால் திறைசேரியின் புத்தகங்களில் மீதியொன்றினை காண்பிக்கவில்லை. | கணக்குகளை தயாரிக்கும் போது சரியான தரவுகளுடன் தயாரிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 06 செலவின விடயங்களுக்குரிய ரூபா 2,900,000 மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் அந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னர் ரூபா 909,083 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. அந்த சேமிப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாட்டின் 13 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையான வீச்சினில் காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக திட்டமிடப்பட்ட பணிகள் அந்த விதத்திலேயே நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமையால் நிதியேற்பாடு எஞ்சியமை மற்றும் நிதியேற்பாடுகளை மாற்றுதல் அவசியமாகும். எவ்வாறான போதிலும் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளின் 96 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. | வருடாந்த மதிப்பீடுகளை நடைமுறைச் சாத்தியமாகவும் ஆக்கபூர்வமாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு. |

**2.2 பொறுப்புகள் தொடர்பான கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) திறைசேரியின் கணனி அச்சீட்டுபத்திரம் இலக்கம் SA-92 இன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 820,000 ஆன பொறுப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்த துடன் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் அது ரூபா 535,735 ஆக பதிவு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 284,265 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றேன். | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல். |
| (ஆ) திறைசேரியின் அச்சீட்டு பதிவு SA-92 இல் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 170,000 தொகையான பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | - மேற்படி - |
| (இ) நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் (வழங்கல்கள் மற்றும் சேவைகள் அல்லாத) நிதியேற்பாடுகளை விஞ்சி பொறுப்புக்களுக்கு கடப்படாது இருக்க வேண்டிய போதிலும் செலவின விடயத்திற்குரிய நிதியேற்பாடுகளை விஞ்சி ரூபா 35,160 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | | |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகள் | சேவையை கைவிட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தின் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியான ரூபா 139,921 தொகை ஐந்து வருட காலமாக அறவிடப்பட்டிருக்க வில்லை. | சேவையை கைவிட்டுச் சென்றுள்ள எம்.எஸ்.பீ. பெரேரா அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 139,921 ஆன தொகையை அறவிடும் பணிகள் 2015.09.03 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 880 | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களினால் பிணை வைப்புக்கள் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களினால் பிணை வைப்புச் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (இ) 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் ஒட்டுமொத்த பதவியணிக்கான வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டிற்கான மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். எனினும் இதுவரையிலும் இந்த திணைக்களத்திற்காக மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2/2020 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தி மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டியின் 6 ஆம் பந்தி | காசுப்பாய்ச்சல் கூற்று மொத்த அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அது காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். தற்போது திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு எமது 2021.05.12 ஆந் திகதிய கடிதத்துடன் தாங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| | | (i) திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் வருமானல்லாத பெறுவனவுகள் ரூபா 3,638,022 ஆன போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் 24,059 ஆக காண்பிக்கப்பட்டமையால் தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 3,613,963 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| | | (ii) திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் நடப்பாண்டின் செலவினம் ரூபா 92,329,778 ஆன போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 85,649,914 ஆக காண்பிக்கப்பட்டமையால் தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 6,679,864 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| | | (iii) திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் ரூபா 4,601,462 ஆன போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 192,475 ஆக காண்பிக்கப்பட்டமையால் தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 4,408,987 இனால் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (iv) திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் முற்பண செலுத்தல்கள் ரூபா 3,620,362 ஆன போதிலும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 2,088,800 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தால் தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 1,531,362 இனால் அதிகரித்து காண்பிக்கப் பட்டிருந்தது. | | |
| (உ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஒவ்வொரு நிதியாண்டிலும் மார்ச் 17 ஆந் திகதிக்கு முன் கடந்த வருடத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2021 மே 21 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அறிக்கை தாங்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | - மேற்படி - |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் ஆண்டிற்குரியதான நாளதுவரையாக்கப்பட்ட திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு, | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விபரங்களை எதிர்வரும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். மேலும் திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி தொடர்பான விபரங்கள் மற்றும் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது நாளதுவரையாக்கப் பட்டுள்ளது. | |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்தின் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பமொன்று இல்லாதிருந்த போதிலும் செலவினத் தலைப்பு இலக்கம் 2102 இன் கீழ் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 500,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்க்காக ரூபா 218,320 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் மொத்த நிதியேற்பாட்டின் 44 சதவீதம் அதன் பிரகாரம் 56 சதவீதம் எஞ்சியிருந்தது. | பெறுகைகள் திட்டத்தினை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் அலுவலகத்திற்காக தளபாடங்களை கொள்வனவு செய்யும் தேவைப்பாடு இல்லாதிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டின் யூலை மாதமளவில் இந்த திணைக்களம் பொதுத் திறைசேரியின் இந்தக் கட்டிடத்தில் தாபிக்க நேர்ந்தது. அதன் பிரகாரம் அலுவலக அறைகளுக்கு பொருந்தும் வகையில் அத்தியாவசியமான தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் திட்டம் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 3.1.2 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்பட்டிருந்த KN-2496 இலக்கம் கொண்ட மோட்டார் வாகனத்தை திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | WP KN 2496 இலக்கம் கொண்ட மோட்டார் வாகனத்தை சுவீகரிப்பதற்கு உரிய ஆவணங்கள் மோட்டார் வாகன திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நிதியல்லாத சொத்துக்கள் உரிய முறையில் முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

### 4.1 இணைப்புச்செய்யப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதன செலவினங்களுக்காக

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினுள் 107 அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் காணப்பட்ட போதிலும் உள்ளபடியான பதவியணி 70 மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் 37 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 35 சதவீதம் ஆகும். அந்த வெற்றிடத்தினுள் சிரேஷ்ட மட்டத்திலான 09 பதவிகளும் மூன்றாம் நிலை மட்டத்திலான 04 பதவிகளும் இரண்டாம் நிலை மட்டத்திலான 20 பதவிகளும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இந்த திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடங்களை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கொவிட் 19 தொற்று நோய் காரணமாக ஏற்பட்ட இடர்களின் மத்தியில் இந்த ஆண்டின் போது இது தொடர்பில் மீண்டும் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படவில்லை.<br><br>வெற்றிடம் நிலவிய போதிலும் தற்போதுள்ள பதவியணியை பயன்படுத்தி திணைக்களத்தின் பணிகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு உச்சளவில் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை உரிய முறையில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |